# தமிழ்நாட்டின் உரிமைகள் — நலன்களுக்காக
# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!



## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு! | 03-04-2025 நிகழ்வுகள்

**சென்னை - தூத்துக்குடி இடையில் புதிய இரயில்கள்**
**துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி கோரிக்கை!**



சென்னை - தூத்துக்குடி இடையிலான பயணிகள் போக்குவரத்து இரயிலில் நெரிசலை தடுக்க ஒன்றிய அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் ஒன்றிய இரயில்வே அமைச்சகத்திடம் திமுக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ்நாட்டின் மிக முக்கிய வணிக நகரமான தூத்துக்குடியில் இருந்து தலைநகரம் சென்னைக்கு அன்றாடம் முத்து நகர் விரைவு வண்டி ஒரு இரயில் மட்டுமே ஓடுகிறது. அதில் கூட்ட நெரிசலைக் குறைக்கவும், மேலும் அதிகரிக்கும் வணிக தொடர்புகளை கருத்தில்கொண்டும், தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் வழியாக பழைய ஜனதா விரைவு வண்டி வழித்தடத்தில் புதிய விரைவு வண்டி இரயிலை அறிமுகப்படுத்த வேண்டும் என ஒன்றிய அரசாங்கத்திடம் அவர் கேட்டுள்ளார்.

அதேபோல் தூத்துக்குடியிலிருந்து குருவாயூர் மற்றும் நாகர்கோவில் விரைவு வண்டிகளை இணைக்கும் இணைப்பு பயணிகள் இரயில்களை அரசாங்கம் மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளதா என்றும் ஏற்கனவே கோரிக்கை வைத்துள்ளபடி சென்னை தூத்துக்குடி இடையில் வந்தே பாரத் விரைவு வண்டியை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டுமிட்டுள்ளதா எனவும் கேட்டுள்ளார்.

**தமிழ்நாட்டில் முக்கிய இணைப்பு சாலைகள் திட்டம் நடைமுறைப்படுத்துவது எப்போது?**
**துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா**



தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளுடன் இணைக்கும் முக்கிய சாலைகளை அமைப்பது மற்றும் மேம்படுத்துவது குறித்து மக்களவையில் திமுக கொறடா ஆ. ராசா எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

சாலை அமைப்பதற்கான இலக்குகள் மற்றும் முன்னுரிமைகள் பற்றிய விவரங்கள், இது தொடர்பாக மாநில அரசு சமர்ப்பித்த திட்டங்கள், அத்திட்டங்களை செயலபடுத்துவதற்காக நிலம் கையகப்படுத்துதல், சுற்றுச்சூழல் அனுமதி மற்றும் தமிழ்நாட்டில் சாலைத் திட்டங்களில் சமூக பாதிப்பு குறித்த ஆய்வுகள் போன்றவற்றை திர்கொள்ள ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்றும் அவற்றை சரியான நேரத்தில் நிறைவு செய்வதை அரசு எவ்வாறு உறுதி செய்கிறது என்றும் அவர் கேட்டுள்ளார்.

**பல்கலைக் கழக தன்னாட்சியை பாதிக்கும் UGC வழிகாட்டுதல்கள் வரைவில் மாற்றம் கோரும் திருச்சி சிவா!**



பல்கலைக்கழக மானியக் குழு வரைவு வழிகாட்டுதல்களின்படி மாநில பல்கலைக்கழகங்களின் தன்னாட்சி பாதிக்கப்படும் என பெரும்பாலன தரப்புகளிடமிருந்து கருத்துகள் வந்துள்ளதை ஒன்றிய அரசு கருத்தில் கொண்டுள்ளதா என்றும் அதன் மீது விரிவான விளக்கம் கேட்டும் திமுக மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா நாடாளுமன்றத்தில் ஒன்றிய கல்வித்துறை அமைச்சரிடம் பின் வரும் கேள்விகளை முன்வைத்துள்ளார்.

NET/SET போன்ற ஒரே மாதிரியான தகுதிகளை விதிப்பதன்மூலம் இந்த வரைவு கல்வியாளர்களின் தனித்துவமான கல்வி மற்றும் பண்பாட்டு பங்களிப்புகளைக் கணக்கிடத் தவறிவிட்டது எனும் குற்றச்சாட்டை அமைச்சகம் ஒப்புக்கொள்கிறதா?

இந்த வரைவு பல்கலைக் கழக வேந்தராக மாநில ஆளுநரின் செயல்பாடுகளை அதிகரித்திருக்கிறது என எழுப்பப்பட்ட ஆட்சேபனைகளை அமைச்சகம் மதிப்பாய்வு செய்துள்ளதா?

இந்த வரைவின் மீதான விமர்சனங்கள் குறித்து மாநில அரசுகள் மற்றும் கல்வி நிறுவனங்களுடன் ஏதேனும் ஆலோசனைகள் நடத்தப்பட்டதா?

**கசிவுகளினால் வீணாகும் உணவுப் பொருட்கள், நடவடிக்கை என்ன?**
**அரக்கோணம் ஜெகத்ராட்சகன்**



பொது விநியோக முறையில் (PDS) ஏற்பட்ட கசிவுகளினால் உணவு தாணியங்கள் வீணாவதுடன் திட்டமிடப்பட்ட பயனாளிகளை சென்றடையத் தவறுவது குறித்து நாடாளுமன்றத்தில் அரக்கோணம் திமுக மக்களவை உறுப்பினர் ஜெகத்ரட்சகன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளில், மாநில வாரியாக, கசிவுகளினால் வீணான உணவு தானியங்களின் மதிப்பின் அளவு எவ்வளவு?

அதே காலகட்டத்தில் இந்த பொது விநியோக முறை கசிவுகளால், கருவூலத்திற்கு ஏற்பட்ட ஆண்டு நிதி இழப்பு எவ்வளவு?

டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் கண்காணிப்பு அமைப்புகளை அறிமுகப்படுத்தி கசிவுகளைக் குறைக்க செயல்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

திட்டமிடப்பட்ட பயனாளிகளுக்கு முறையாக உணவுப் பொருட்கள் கிடைக்கப்பெறுவதை அரசாங்கம் உறுதி செய்துள்ளதா என்று பல்வேறு கேள்விகளை அவர் உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சகத்திடம் கேட்டுள்ளார்.

**தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?**
**ஆர். கிரிராஜன் கேள்வி!**



இந்தியாவில் உள்நாடு, வெளிநாடு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் முதன்மை மாநிலங்களில் ஒன்றாக இருப்பதால் தமிழ்நாட்டிற்கு போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை என்பது உண்மையா? அப்படியானால் அதற்கான காரணங்கள் என்ன? என்று நாடாளுமன்றத்தில் திமுக மாநிலங்களவை உறுப்பினர் ஆர். கிரிராஜன் கேள்வி எழுப்பியுள்ளார்.

சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைக்கு புத்துயிர் அளிப்பதற்கு தமிழ்நாட்டிலும் நாடு முழுவதிலும் ஒன்றிய அரசு எடுத்த முன்முயற்சிகள் என்ன? கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்காகவும் உட்கட்டமைப்பு திட்டங்களுக்காகவும் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கேட்டுள்ளார்.

**உயர்கல்வித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு**
**ஆர். கிரிராஜன் கேள்வி!**

உயர்கல்வித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் ஆர். கிரிராஜன் நாடாளுமன்றத்தில் ஒன்றிய கல்வி அமைச்சரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில் கடந்த ஐந்து ஆண்டுகளில் உயர்கல்விக்கான ஒட்டுமொத்த வருடாந்திர செலவு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒன்றிய நிதியின் சதவீதம் என்ன? GER மற்றும் Ph.D. ஆராய்ச்சி பட்டங்களின் அடிப்படையில் தமிழ்நாடு போன்ற சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுடன் பொருந்தக்கூடிய வகையில் நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்த அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை? பல்கலைக் கழக மானியக் குழுவின் முக்கிய ஆராய்ச்சித் திட்டங்கள், பல்கலைக் கழக மானியக் குழுவின் சிறு ஆராய்ச்சித் திட்டங்கள், RUSA, IMPRESS, IMPRINT மற்றும் பிற குறிப்பிட்ட உயர்கல்வித் திட்டங்களுக்காக கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் செலவு விவரங்கள் யாவை? என அவர் கேட்டுள்ளார்.

**குடும்ப நல நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகள்! தீர்வு எப்போது?**
**டாக்டர். கனிமொழி சோமு கேள்வி!**



நாடு முழுவதும் செயல்படும் குடும்பல நல நீதிமன்றங்களின் எண்ணிகை எவ்வளவு? மாநில வாரியான எண்ணிக்கை என்ன? என்றும் இந்நீதிமன்றங்களில் கடந்த மூன்று ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை, தீர்ப்பு அளிக்கப்பட்ட வழக்குகள் மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் மாநில வாரியான விவரங்கள் என்ன? என்றும் மாநிலங்களவையில் திமுக எம்.பி. டாக்டர் கனிமொழி சோமு கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளில் தீர்வு காண்பதில் மாநிலங்கள் சிக்கல்களை எதிர்கொள்கின்றனவா? அப்படியானால் அதற்காக ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? எனவும் அவர் குறிப்பிட்டு கேட்டுள்ளார்.

**இந்தியை மட்டும் வளர்க்கும் ஒன்றிய அரசு!**
**மற்ற அலுவல் மொழிகளுக்கு செய்யும் துரோகம்!**
**டாக்டர் கனிமொழி சோமு குற்றச்சாட்டு**

இந்திய அலுவல் மொழித்துறை தேசிய அளவில் இந்தியை மட்டும் ஊக்குவிற்பதாக நாடாளுமன்றத்தில் திமுக மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் கனிமொழி சோமு குற்றம் சாட்டியுள்ளார்.

இதுவரையில் இந்தியை மேம்படுத்துவதற்காக அமைச்சகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அதற்காக செலவிடப்பட்ட தொகையின் விவரங்கள் என்ன என கேட்டுள்ள அவர் இந்த நடவடிக்கை மாநிலங்களின் மொழியியல் பன்முகத்தன்மை மற்றும் பண்பாட்டு அடையாளங்களை குறைத்து மதிப்பிடுவதுடன் பிராந்திய மொழி பேசுபவர்களுக்கு அநீதி ஏற்படுத்துகிறது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பின் வழிகாட்டுதலின்படி அனைத்து பிராந்திய மொழிகளுக்கும் சமமான மேம்பாட்டை உறுதி செய்ய அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன என பதிலளிக்குமாறும் கனிமொழி சோமு எம்.பி. கேட்டுள்ளார்.

**தமிழ்நாட்டில் உள்ள பண்பாட்டு தளங்களின் வளர்ச்சிக்கு ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?**
**எம்.எம்.அப்துல்லா கேள்வி!**



தமிழ்நாட்டில் உள்ள பண்பாட்டு தளங்களின் வளர்ச்சிக்காக ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? 2020 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை ஆண்டுவாரியாக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன? அதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டு செலவிடப்பட்டுள்ளது? தற்போதைய நிலை என்ன? என அடுக்கடுக்கான கேள்விகளை மாநிலங்களவையில் எம். எம். அப்துல்லா எம்.பி. எழுப்பினார்.

மேலும் தமிழ்நாட்டில் உள்ள பண்பாட்டு தளத்தை மக்களிடம் கொண்டு செல்வதற்கு மெய் நிகர் சுற்றுலா போன்ற தொழில்நுட்பம் சார்ந்த முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டுள்ளனவா? என ஒன்றிய பண்பாடு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சரிடம் கேள்வி கேட்டுள்ளார்.

**கச்சா எண்ணெய் விலை குறைந்தபோதும் குறையாத பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை!**
**கணபதி ராஜ்குமார் குற்றச்சாட்டு!**



கடந்த ஆண்டுகளில் உலகம் முழுவதும் கச்சா எண்ணெய் விலை குறைந்திருந்தபோதும் இந்தியாவில் எரிபொருள் விலையில் அது பிரதிபலிக்காதது ஏன் என்று நாடாளுமன்றத்தில் கோவை திமுக மக்களவை உறுப்பினர் கணபதி ராஜ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒன்றிய அரசு கச்சா எண்ணெயை கொள்முதல் செய்யும் விலைக்கும் நாட்டில் அதை விற்பனை செய்யும் விலைக்கும் மிகப்பெரிய வேறுபாடு நிலவுகிறது என்றும் அதற்கான காரணங்கள் என்ன எனவும் அவர் கேட்டுள்ளார்.

மேலும் பெட்ரோலிய பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் லாபம் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் வெளியிடப்பட்ட பெட்ரோலிய பத்திரங்களுக்கான தொகைக்கு செலுத்தப்படுகிறதா? அப்படியானால், இதுவரை பெட்ரோலிய பத்திரங்களுக்கு எவ்வளவு தொகை தீர்வு செய்யப்பட்டுள்ளது? தற்போதைய பெட்ரோலிய பத்திரங்களின் சுமை எவ்வளவு? என்றும் விளக்கம் கேட்டுள்ளார்.

**தேசிய புவிசார் திட்டத்தின் நோக்கங்கள் என்ன?**
**வட சென்னை டாக்டர் கலாநிதி வீராசாமி கேள்வி**



தேசிய புவிசார் திட்டத்தை (NATIONAL GEOSPATIAL MISSION) குறித்து விரிவான விளக்கமளிக்குமாறு ஒன்றிய அரசிடம் நாடாளுமன்றத்தில் வடசென்னை திமுக மக்களவை உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த திட்டத்தின் குறிக்கோள் மற்றும் அதன்கீழ் மதிப்பிடப்பட்ட நிதிகளின் விவரங்கள், அடிப்படை புவிசார் உள்கட்டமைப்பு மற்றும் தரவை உருவாக்குவதற்கான திட்டங்கள், இந்தியாவின் இடஞ்சார்ந்த தரவு அமைப்புகளின் நவீனமயமாக்கலுக்கு இது எவ்வாறு பங்களிக்கும் என்பது குறித்தான ஆய்வுகள், இந்த திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட புவிசார் தரவு மற்றும் உள்கட்டமைப்பின் நீண்டகால நிலைத்தன்மை மற்றும் பாதுகாப்பை அரசாங்கம் எவ்வாறு உறுதி செய்யும் மற்றும் தொடர்ச்சியான புதுப்பிப்புகள் மற்றும் பராமரிப்புக்கான நடவடிக்கைகள் என்ன அவர் குறிப்பிட்டு கேட்டுள்ளார்.

**வாடிக்கையாளர்களின் தனியுரிமை மற்றும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்**
**பொள்ளாச்சி கே.ஈஸ்வரசாமி**



இணைய சேவை வழங்குநர்கள் (ISP-கள்) குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு வாடிக்கையாளர்களின் அனைத்து ஆன்லைன் செயல்பாடுகளின் பதிவையும் வைத்திருக்க வேண்டும் என அறிவுறுத்துமாறு உளவுத்துறை தொலைத்தொடர்புத் துறையை (DoT) கேட்டுக் கொண்டது குறித்து பொள்ளாச்சி மக்களவை உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார். இதற்கு அரசு மற்றும் ISP-களின் பதில் என்ன என்றுகேட்டுள்ள அவர், அத்தகைய பதிவுகளை வைத்திருப்பது வாடிக்கையாளரின் தனியுரிமை மற்றும் பாதுகாப்பை அச்சுறுத்தும் எனவும், அரசாங்கம் வாடிக்கையாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**இரயில் நிலையங்கள் மறுசீரமைப்பு, தாமதம் ஏன்?**
**ஆரணி தரணிவேந்தன் கேள்வி**



தமிழ்நாட்டில் மட்டுமல்லாது நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் இரயில் நிலையங்கள் பராமரிப்பின்றி இருப்பதை சுட்டிக் காட்டி நாடாளுமன்றத்தில் ஆரணி திமுக எம். பி. தரணிவேந்தன் ஒன்றிய இரயில்வே அமைச்சகத்திடம் பின்வரும் கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் மறுசீரமைப்புக்கு திட்டமிடப்பட்டுள்ள ரயில் நிலையங்களின் எண்ணிக்கை?

இந்தத் திட்டத்திற்காக இரயில் நிலையங்களைத் தேர்ந்தெடுக்கப் பயன்படுத்தப்படும் அளவுகோல்கள் என்ன?

மறுசீரமைப்பிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி எவ்வளவு?

இந்த மறுசீரமைப்பு நிலையங்களில் உள்கட்டமைப்பு, பயணிகள் வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்த எடுத்த நடவடிக்கைகள் என்ன?

மறுசீரமைப்பு திட்டத்தை முடிப்பதற்காக எதிர்பார்க்கப்படும் காலக்கெடு என்ன?

மறுசீரமைப்புச் செயல்பாட்டில் பொது-தனியார் கூட்டமைப்பின் (பிபிபி) பங்கு மற்றும் குறிப்பிட்ட நிலையங்களின் மேம்பாட்டுக்காக ஏதேனும் தனியார் பங்கேற்பாளர்கள் ஈடுபட்டிருந்தால் அவர்களின் விவரங்கள் என்ன?

வழக்கமான ரயில் சேவைகளுக்கு இடையூறு விளைவிக்காமல் நிலையங்களின் மறுசீரமைப்பை உறுதி செய்ய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட/எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாது?

கட்டுமானப் பணிகளின் போது பயணிகளுக்கு ஏற்படும் சிரமத்தைக் குறைக்க அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட/எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன?

## இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை விரைவில் மறு ஆய்வு செய்து
# கச்சத்தீவை மீட்க உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்!
## பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஏப்.4–**

**தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிரந்தரமாக பாதுகாக்கும் வகையில், இந்திய–இலங்கை ஒப்பந்தத்தை விரைவில் மறு ஆய்வு செய்து கச்சத்தீவை மீட்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும், இலங்கை அரசுடன் பேசி, அந்நாட்டு சிறையில் வாடும் நமது மீனவர்களையும், அவர்களது படகுகளையும் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்து மீட்டுக் கொண்டுவர வேண்டுமென்பதை வலியுறுத்தியும் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 02.04.2025 அன்று கச்சத்தீவை மீட்க வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில், தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிரந்தரமாக பாதுகாக்கும் வகையில், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை விரைவில் மறு ஆய்வு செய்து கச்சத்தீவை மீட்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் அரசுமுறைப் பயணமாக இலங்கை செல்லும் பிரதமர் அவர்கள், இலங்கை அரசுடன் பேசி, அந்நாட்டு சிறையில் வாடும் நமது மீனவர்களையும், அவர்களது படகுகளையும் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்து மீட்டுக் கொண்டுவர வேண்டுமென்பதை வலியுறுத்தியும் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (03.04.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், பாக். வளைகுடா பகுதியில் வாழும் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாக்கும் வகையில், கச்சத்தீவை திரும்பப் பெறுவது தொடர்பாக 02.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், 1974-ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்தியா-இலங்கை ஒப்பந்தம் (கச்சத்தீவு ஒப்பந்தம்) தான் நீடிக்கும் இப்பிரச்சனைக்கு அடிப்படையாக உள்ளது என்பதை தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

கச்சத்தீவு ஒப்பந்தத்தை ஆரம்பத்திலிருந்தே தமிழ்நாடு அரசு உறுதியுடன் எதிர்த்து வந்துள்ளதையும், 1974-ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் கச்சத்தீவை இலங்கைக்கு விட்டுக் கொடுத்ததை தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்போது கடுமையாக எதிர்த்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், 28.06.1974 அன்று ஒன்றிய அரசு கச்சத்தீவு ஒப்பந்தத்தில் மாநில அரசின் இசைவின்றி கையெழுத்திட்ட பிறகு, அப்போதைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உடனடியாக மறுநாளே 29.06.1974 அன்று தலைமைச் செயலகத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, அதைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றி, அன்றைய தினமே அப்போதைய இந்தியப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளதையும் தனது கடிதத்தில் கோடிட்டு காட்டியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, கச்சத்தீவு பிரச்சினையில் ஒன்றிய அரசின் முடிவை வன்மையாக எதிர்த்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 21.08.1974 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையும், நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாக்க, கச்சத்தீவினை திரும்பப் பெற வேண்டும் என்ற நிலையான கோரிக்கையை வலியுறுத்தி, 03.10.1991, 03.05.2013, 05.12.2014 ஆகிய நாட்களில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை இதே போன்ற தீர்மானங்களை நிறைவேற்றியுள்ள தையும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நமது மீனவர்கள் அடிக்கடி கைது செய்யப்படுவதாலும், அவர்களது படகுகள் பெருமளவில் பறிமுதல் செய்யப்படுவதாலும், கடலோர மீனவ சமுதாயத்தினரின் வாழ்க்கை மிகுந்த கவலையிலும், துயரத்திலும் ஆழ்ந்துள்ளதாக தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், கைது மற்றும் பறிமுதல் நடவடிக்கைகளால் மீனவர்களின் வாழ்வாதாரமும் நிலையற்றதாக மாறியுள்ளதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தான் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு இந்தியப் பிரதமர் அவர்களுடன் 17.06.2021 அன்று நடைபெற்ற முதல் சந்திப்பின்போது, இப்பிரச்சினையை பிரதமர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்ததாகவும், இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்ற தமிழ்நாடு அரசின் முந்தைய கோரிக்கைகளை அடுத்தடுத்த சந்திப்பின் போதும் வலியுறுத்தியுள்ளதாகவும், இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவது மற்றும் தாக்கப்படுவது குறித்து 2021-ஆம் ஆண்டு முதல் வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களுக்கும், பிரதமர் அவர்களுக்கும் பல முறை கடிதங்களை எழுதியுள்ளதையும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

2024-ஆம் ஆண்டில், 530 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், 2025-ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில், 147 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், நமது மீனவர்களுக்கு அதிகபட்ச சிறைத்தண்டனையும், பெருந்தொகையும் அபராதமாக விதிக்கப்பட்டு வருவதாகவும், அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு ஏலத்திற்கு விடப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள் இலங்கையின் இத்தகைய தீவிர நடவடிக்கைகள் நமது மீனவர்களை வறுமையின் விளிம்பு நிலைக்குத் தள்ளியுள்ளதால், இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு ஒரே வழி கச்சத்தீவை திரும்பப் பெற வேண்டும் என்ற தொடர் கோரிக்கையை மீண்டும் வலியுறுத்துவதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை உடனடியாக மறு ஆய்வு செய்து, கச்சத்தீவை மீட்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றிய அரசு எடுக்க வேண்டும் என்றும் அரசுமுறைப் பயணமாக இலங்கை செல்லும் இந்தியப் பிரதமர் அவர்கள், இலங்கை அரசுடன் பேசி, அந்நாட்டு சிறையில் வாடும் நமது மீனவர்களையும், அவர்களது படகுகளையும் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்து மீட்டுக் கொண்டுவர வேண்டுமென்பதை வலியுறுத்தி 02.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதையும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிரந்தரமாக பாதுகாக்கும் வகையில், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை விரைவில் மறு ஆய்வு செய்து கச்சத்தீவை மீட்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி முதலமைச்சர் அவர்கள் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், ஐந்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் மண்டலம் 9–இல், இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 05.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | 1 | சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி | காமாட்சி–மீனாட்சி திருமண மண்டபம், சிந்தாதிரிப்பேட்டை |
| 06.04.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | | ஆயிரம்விளக்கு | அண்ணா அறிவாலயம், தேனாம்பேட்டை |
| 12.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | தியாகராய நகர் | ஆதித் ஹால், முத்துரங்கன் சாலை, தியாகராய நகர் |
| 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | | மயிலாப்பூர் | மகிழ் ஹால், சிருங்கேரி மடம் சாலை, ஆர்.ஏ.புரம், மயிலாப்பூர் |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | அண்ணா நகர் | அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, அமைந்தக்கரை |
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | 9 | தூத்துக்குடி | கலைஞர் அரங்கம், தூத்துக்குடி |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | கோவில்பட்டி | சௌபாக்கியா மஹால், கோவில்பட்டி |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 02-04-2025



உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி